தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 - சித்திரை 7

2010 ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்.)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

வேளாண்மை விரிவாக்க மையம்

***88250—திரு. எஸ். இராசசேகரன் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் துவக்க *அரசு ஆவன செய்யுமா?*

[2010 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆலங்குடி தொகுதியில், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.*

திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளாள விடுதியையொட்டி 4 ஊராட்சிகள் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகின்ற கிராமங்கள். ஆகவே, அந்தப் பகுதியில், குறிப்பாக வெள்ளாள விடுதியில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளாள விடுதி அருகில் மழையூரில் வேளாண் விரிவாக்க மையம் இருக்கின்றது. அது 5 கி.மீ. தூரம்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கின்ற அந்த வினாவையொட்டி அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.*

திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விரிவாக்க மையத்தில் நெல், பூச்சி மருந்து போன்றவை விற்கப்படுகின்றன. அத்துடன், சோளம், மிளகாய், கத்தரி, வெண்டை போன்ற விதைகள் இப்போது அதிக அளவில் தேவைப்படுகின்றன. ஆகவே, அந்த விதைகளையும் வேளாண்மை விரிவாக்க மையத்தின்மூலம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? மேலும் அங்கே* sprayer, *உரம் போன்றவை கொடுக்கப்பட்டு வந்தன. தற்போது அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே, அவற்றையும் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மை மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தரமான சான்று பெற்ற விதைகள்* Azospyrillum, Phosphobacteria *போன்ற உயிர் உரங்கள், திட்டங்களுக்கானப் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மானிய மற்றும் முழு விலையில் வழங்கப்படுவதுடன், விவசாயிகளுக்குத் தொழில்நுட்பப் பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்ட அந்த விதைகளையும் விற்பனை செய்ய இயலுமா என்று அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

கட்டட வசதி

***38455—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறிலுள்ள பழைய நீதிமன்றக் கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *பேரவைத் தலைவர் அவர்களே,*

உயர் நீதிமன்றத்தின் முன்னுரிமைப் பட்டியலில் செய்யாறினுடைய பெயர் வரவில்லை. அப்படி வந்தாலும், இந்த ஆண்டு எடுத்துக்கொள்கிற நிலை இல்லை. காரணம், இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப ஏற்கெனவே 19 ஊர்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. செய்யாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்பட வேண்டுமென்பதை நானே